**தலைப்பு 418 – சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும்

வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு மீளாய்வாண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டிருந்தமையினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவையொன்று காணப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காமை

அரச கணக்குகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 06 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த தேவைகளுக்கு புறம்பான சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பௌதீக சொத்துக்கள் கைப்பற்றல்களின் பெறுமதி ACA-6 இல் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் ரூபா 854,029 ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் பௌதீக சொத்துக்கள் கைப்பற்றல்களின் பெறுமதிக்கு மூலதன சொத்துக்கள் புனரமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் செலவினம் மற்றும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயக பணியகத்தின் மூலதன செலவினங்கள் சேர்க்கப்பட்டு ரூபா 190,586,601 ஆக காண்பிக்கப்பட்டமையினால் | எதிர்காலத்தில் புதிய செலவின வகைப்படுத்தலின் கீழ் காசுப் பாய்ச்சல் கூற்றில் புனர்வாழ்வு ஆணையாளர் நாயக அலுவலகத்தின் செலவினங்களை உள்ளடக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

அப்பெறுமதி ரூபா 189,732,572 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் அதன் காரணமாக நிதி உதவிகள் மற்றும் மாற்றல்களின் பெறுமதி ரூபா 189,386,542 இனாலும் ஆளணி வேதனங்கள், செயற்பாட்டு செலவினங்கள் ரூபா 346,029 இனாலும் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

## 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது ரூபா 97,975 தொகையில் விற்பனை செய்யப்பட்ட அலுவலக உபகரணங்கள், கணனி துணைப்பாகங்கள், இயந்திரம் மற்றும் பொறிகள் போன்ற சொத்துக்களின் கிரய பெறுமதி இனங்காணப்பட்டு நிதியல்லா சொத்து கணக்கிற்கும் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஒதுக்கக் கணக்கிலும் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் போது ரூபா 97,975 தொகையில் விற்பனை செய்யப்பட்ட அலுவலக உபகரணங்கள், கணனி துணைப்பாகங்கள், இயந்திரங்கள் மற்றும் பொறிகள் போன்ற சொத்துக்களின் கிரய பெறுமதி நிதியல்லா சொத்துக் கணக்கிலும், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண ஒதுக்க கணக்கிலிருந்தும் அகற்றுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) ஏனைய நிறுவனங்களுக்கு சட்டரீதியாக கையளிக்கப்பட்ட 04 வாகனங்களின் பெறுமதி ரூபா 45,200,000 தொகை 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் நிதியல்லா சொத்துக்களில் இருந்தும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஒதுக்கங்களில் இருந்தும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏனைய நிறுவனங்களுக்கு சட்ட ரீதியாக கையளிக்கப்பட்டுள்ள வாகனங்கள், நிதியல்லா சொத்துக்களில் இருந்தும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண ஒதுக்கங்களில் இருந்தும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | புனர்வாழ்வு ஆணையாளர் நாயக பணியகத்தின் மூலதன மாற்றல்களின் பெறுமதியான ரூபா 288,513,580 தொகையை உள்ளடக்கிய மூலதன சொத்துக்கள் கைப்பற்றலுக்குரிய பெறுமதி நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் நிதியல்லா சொத்துக் கணக்கிலும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண ஒதுக்கல் கணக்கிலும் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புனர்வாழ்வு ஆணையாளர் நாயக பணியக்கத்தின் மூலதன சொத்தக்கள் கைப்பற்றல்களின் பெறுமதி அந்த பணியகம் முன்னர் காணப்பட்ட அமைச்சின் அமைச்சின் கீழேனும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அரச கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசனையினை பெற்று எதிர்காலத்தில் அந்த பணியகத்தின் மூலதன சொத்துக்கள் கைப்பற்றல்களின் பெறுமதி நிதியல்லா சொத்துக் கணக்கிலும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண ஒதுக்கக் கணக்கிலும் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

### 1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை

---

அமைச்சினால் கீழே குறிப்பிடப்படுகின்ற சில பதிவேடுகள் பேணிச் செல்லப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணிச் செல்லப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | **பிணைப் பதிவேடு** | | |
| | நிதிப் பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய பிணைப் பதிவொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணைப் பதிவேடொன்றை பேணிச் செல்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணைப் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட வேண்டும். |

(ஆ) **மின்சார உபகரணங்கள் தொடர்பாக பதிவேடு**

| | | |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடொன்று நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. | தற்போது பேணிச் செல்லபடுகின்ற மின்சார உபகரணங்கள் பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 454(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

---

**2.1 செலவின முகாமைத்துவம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 மீண்டெழும் செலவின விடயங்களுக்கான நிதிஏற்பாட்டு தொகையில் ரூபா 150,000 நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் மாற்றம் செய்யப்பட்டதன் பின்னரும் 63 சதவீத மற்றும் 73 சதவீத சேமிப்பு அவதானிக்கப்பட்டது. | எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் உணவு பானங்கள், சீருடைகள் மற்றும் கட்டிட திருத்தச் செலவினம் என்பன எழாதிருந்தமையினால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது. | நிதிஏற்பாடு குறித்துரைத்த பிரகாரம் திட்டமிடப்பட்டு கோரப்பட வேண்டும். |
| (ஆ) | மீண்டெழும் செலவின விடயத்திற்கும் மூலதன செலவின விடயத்திற்கும் ஒதுக்கப்பட்ட ரூபா 650,000 தேறிய மொத்த நிதி ஏற்பாடும் பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | * திசெம்பர் மாத மின்சார பட்டியல்களை தீர்ப்பதற்கான மீண்டெழும் நிதி ஏற்பாட்டின் சேமிப்பு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.<br>* கௌரவ அமைச்சர் மற்றும் அவரது பதவியணியினருக்காக ஒதுக்கப்பட்ட வாகனத்திற்கான மூலதன வடிவிலான செலவினங்கள் எழாதிருந்தமையினால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| புனர்வாழ்வு ஆணையாளர் நாயக பணியகத்தில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 28,633,779 ஆக இருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் தொடர்பாக கூற்றில் அப்பெறுமதி ரூபா 8,313,297 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | நாட்டில் காணப்படுகின்ற கொரோ தொற்று நோயின் காரணமாக கந்தக்காடு மற்றும் சேனபுற நிலையங்களில் கைதிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு கொரோனோ தொற்று ஏற்பட்டமையினால் கிருமிகளுடன் ஆவணங்களை நேரடியாக பெற்றுக்கொள்ளல் பிரயோக ரீதியில் கஷ்டமாக இருந்தமையினால் அந்த பொறுப்புக்கள் ஒதுக்கீட்டு கணக்கில் உள்ளடக்குவதற்கு முடியாதிருந்தமையை குறிப்பிடுகின்றோம். | பொறுப்புக்களின் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 2.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உள்ளக கணக்காய்வு பணிகளை சரியான பிரகாரம் அமுல்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான திட்ட முறைமையொன்று உள்ளது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அறிக்கையின் 4.1 மற்றும் 4.2 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் அந்த தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பிரதான கணக்காய்வாளரை உள்ளடக்கிய பதவியணியினர் வழங்கப்பட்டதும் உடனடியாக உள்ளக கணக்காய்வு அலகின் வேலை நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும் என அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | நிதிப் பிரமாணம் 571(2) மற்றும் (3) | 02 வருடங்களை விஞ்சிய சகல வைப்புக்களும் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் 6000/0/0/016/0/055 என்ற வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு 02 வருடங்களை விஞ்சிய ரூபா 4,550,943 வைப்புப் பணத்தை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புனர்வாழ்வு ஆணையாளர் நாயக பணியகத்திற்குரியதாக நிறுத்தி வைக்கப்பட்ட பணம் எதிர் காலத்தின் போது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்குமாறு உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி | அமைச்சின் பதவியணியினரின் ஒவ்வொரு அங்கத்தவர்களுக்காகவும் வருடம் ஒன்றுக்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி | 2020 ஆம் ஆண்டின் போது கொவிட் 19 தொற்று நோயினால் ஆளணியினரை ஒன்று சேர்த்தல் நடைமுறை ரீதியில் முடியாதிருந்தமையினால் பதவியணியினரை | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சந்தர்ப்பமொன்று மனித வள அபிவிருத்தி திட்டத்தில் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டிற்கான மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படவில்லை. | |
| )இ) | 2020 நவம்பர் 30 ஆம் திகதிய 06/2020 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 23 மற்றும் 24 ஆம் பந்திகள் | வேலை மற்றும் வாடகை முற்பண மீதிகள் கையளிக்கப்பட்ட செலவின தலைப்பினால் அந்த மீதிகளை கணக்கீடு செய்வதற்காக அரச கணக்குகள் திணைக்களத்தில் இருந்து தமது செலவின தலைப்பின் கீழ் தனித்தனியாக கணக்கீட்டு இலக்கம் ஒன்றைப் பெற்று கணக்கீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும் அமைச்சின் கட்டிட வாடகை முற்பணம் 6,600,000 தொகை மற்றும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயக பணியகத்தின் வேலை முற்பணம் ரூபா 33,456,588 தொகையும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கட்டிட வாடகை முற்பணமாக செலுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது அரச கணக்குகள் திணைக்களத்தின் ஊடாக கணக்கு இலக்கம் வழங்கப்பட வேண்டும். பின்னைய ஆண்டின் போது கணக்கு இலக்கம் பெறப்படாதிருந்தமையினால் முற்பணத்தை மீள பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களின் போது அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைக்குமாறு ஆலோசனை பெறப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.5 முற்பண கணக்கு மீதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வேலை நீக்கத்திற்கு உட்பட்டிருந்த இரண்டு உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய இடர் கடன் மீதியான ரூபா 229,320 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அந்த கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேலை நீக்கத்திற்கு உட்பட்ட உத்தியோகத்தரின் கடன் மீதியை அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | குறித்துரைத்த கால எல்லையில் கடன் மீதி அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புனர்வாழ்வு ஆணையாளர் நாயக பணியகத்தினால் சேனப்புற மற்றும் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையங்களில் விடுதிகளை நிர்மாணிப்பதற்காக 2016 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா 7,529,768 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கை செய்வதற்கு முன் நிர்மாண காணியின் உரித்தை சட்ட ரீதியாக கையேற்றல் மற்றும் கட்டிட திட்டங்களை அங்கீகரித்துக் கொள்ளல் இன்றி வேலை ஆரம்பித்ததன் காரணமாக இடைநடுவில் நிர்மாண நடவடிக்கைகளை நிறுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் ஆரம்பிக்கப்பட்டவை நிர்மாண நடவடிக்கைகள் ஆக இருந்தமையினால் அதன் பிரகாரம் முற்பணம் செலுத்தப்பட்டுள்ளதுடன், காணியின் உரித்து தொடர்பாக பிரச்சினையொன்று பணியகத்தினால் அவ்வப்போது 4 அமைச்சின் கீழ் நியமிக்கப்பட்டதன் காரணமாக அபிவிருத்தி நடவடிக்கைகள் இடையூறாக இருந்தமையை குறிப்பிட்டுக் கொள்கின்றோம். | சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சினால் நிதியல்லா சொத்துக்களின் முகாமைத்துவம் தொடர்பாக விநியோகிக்கப்பட்ட 2017 திசெம்பர் 21 ஆம் திகதிய | இந்த அமைச்சின் கீழ் காணப்படுகின்ற வாகனங்களை இந்த அமைச்சிக்கு கையளிப்பதற்கும் ஏனைய வாகனங்களை அந்தந்த | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2(i) ஆம் பந்தியின் பிரகாரம் வாகனங்களின் உரித்து முறையாக கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும், அமைச்சுக்கு சொந்தமாக காணப்பட்ட ரூபா 84,400,000 பெறுமதியான 13 வாகனங்கள் 2019 ஆம் ஆண்டின் போது வெளி நிர்வனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அதில் அனேகமான வாகனங்கள் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அதன் சட்ட ரீதியான உரித்தை அந்த நிறுவனங்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அலுவலகங்களுக்கு வழங்குவதற்கும் நீதி அமைச்சின் செயலாளருக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. அந்த அங்கீகாரம் கிடைத்ததும் உடனடியாக சகல வாகனங்களையும் சட்ட ரீதியாக கையளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (ஆ) | அமைச்சிற்கு சொந்தமான ரூபா 8,550,000 பெறுமதியான 03 வாகனங்கள் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் குறைவான பயன்பாட்டுடன் அமைச்சு வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும், அதனை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது அவ்வாறு இல்லையாயின் விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் நிதி அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட 2020 ஒக்டோபர் மாதம் 02 ஆம் திகதிய 05/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுப்பதற்கு தவறியிருந்தது. | அமைச்சுக்கு சொந்தமான இந்த வாகனங்களில் ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தவைகள் பழுதுபார்க்க வேண்டிய நிலையில் காணப்படுகின்றமையினால் பழுதுபர்ப்பதற்கு ஏற்படுகின்ற செலவினங்களை மதிப்பீடு செய்து கட்டுப்பாட்டாளர் நாயக அலுவலகத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு அலகொன்றை ஸ்தாபிப்பதற்காக பதவியணியினரின் தேவையை காண்பித்து அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பிரதான உள்ளக கணக்காய்வாளரை உள்ளடக்கிய பதவியணியினருக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டவுடன், உடனடியாக உள்ளகக் கணக்காய்வு அலகின் வேலை நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும் என அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 சனவரி 12 ஆம் திகதிய DMA/01-2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள சுற்றறிக்கையின் 05.3 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | பிரதான உள்ளக கணக்காய்வாளரை உள்ளடக்கிய பதவியணியினர் வழங்கப்பட்டதன் பின்னர் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டதை நடாத்துவதற்கு முடியும் என அறியத்தருகின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**5. மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அமைச்சில் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 73 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான பதவியணியினர் 61 ஆக இருந்தமையினால் வெற்றிட பதவிகளின் எண்ணிக்கை 12 ஆகும். இதில் உள்ள சிரேஷ்ட நிலையின் 08 பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையினால் அது அமைச்சின் செயலாற்றல் இலக்கை அடைந்து கொள்வது தொடர்பில் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. | வெற்றிடமான பதவிகள் தொடர்பாக அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அத்தியவசிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |